சென்னை மெட்ரோ ரெயில் திட்ட 2ம் கட்ட பணி: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

சென்னை, ஜூலை 15–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று (14–ந் தேதி) தலைமைச்செயலகத்தில், சிறப்பு முயற்சிகள் துறையின்கீழ் இயங்கும் சென்னை மெட்ரோ ரெயில் திட்டங்கள் குறித்தும், அதன் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், உலகத்தரத்திற்கு இணையான, பாதுகாப்புடன் விரைவாகப் பயணிக்கக்கூடிய வகையில் உள்ள சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தில், இதுவரை பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, சென்னைப் பெருநகர மக்களின் பயன்பாட்டில் உள்ள முதல் கட்டம் மற்றும் அதன் நீட்டிப்புக் குறித்தும், இரண்டாம் கட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்துப் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

சென்னை மெட்ரோ ரெயில் திட்டம், முதல் கட்டத்தின் நீட்டிப்பில் அறிவிக்கப்பட்ட மீனம்பாக்கம் முதல் கிளாம்பாக்கம் வரையிலான வழித்தடம் மற்றும் தாம்பரம் முதல் வேளச்சேரி வரையிலான வழித்தடப் பணிகளை விரைந்து செயல்படுத்திட அறிவுறுத்தினார். மேலும், சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் கட்டம்–2–ன் பணிகள் குறித்தும் முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, நிதித்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், சிறப்பு முயற்சிகள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் விபு நய்யர், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் பிரதீப் யாதவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

ஏ.டி.எம். கார்டு, கிரெடிட் கார்டு வழங்க மாஸ்டர்கார்டு நிறுவனத்துக்கு ரிசர்வ் வங்கி தடை

மும்பை, ஜூலை 15

இனி புதிதாக யாருக்கும் ஏ.டி.எம். கார்டு, கிரெடிட் கார்டு, பிரீபெய்டு கார்டு ஆகியவற்றை வழங்க மாஸ்டர் கார்டு நிறுவனத்துக்கு ரிசர்வ் வங்கி தடை விதித்தது.

மாஸ்டர்கார்டு, விசா உள்ளிட்ட நிறுவனங்கள், பல்வேறு வங்கிகளுக்கான ஏ.டி.எம்., கிரெடிட் கார்டுகளை வழங்கி வருகின்றன.

இத்தகைய நிறுவனங்களுக்கு கடந்த 2018ம் ஆண்டு ஏப்ரல் 6ந் தேதி ரிசர்வ் வங்கி ஒரு சுற்றறிக்கை வெளியிட்டது. அதில் 6 மாதங்களுக்குள் அந்த நிறுவனங்கள், வாடிக்கையாளர்களிடம் சேகரித்த தகவல்கள், பண பரிமாற்ற விவரங்களை இந்தியாவில் மட்டுமே சேகரித்து வைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது.

இந்த உத்தரவுக்கு மாஸ்டர் கார்டு நிறுவனம் உடன்படவில்லை. இதையடுத்து, புதிதாக யாருக்கும் ஏடிஎம் கார்டு, கிரெடிட் கார்டு, பிரீபெய்டு கார்டு ஆகியவற்றை வழங்க மாஸ்டர்கார்டு நிறுவனத்துக்கு ரிசர்வ் வங்கி நேற்று தடை விதித்தது.

இந்த தடை, வருகிற 22ந் தேதியில் இருந்து அமலுக்கு வருகிறது. இத்தகைய தடை விதிக்கப்படும் 3வது நிறுவனம் மாஸ்டர்கார்டு ஆகும். இருப்பினும், அதன் பழைய வாடிக்கையாளர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி 17 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாக உயர்வு

ஜூலை 1 முதல் அமலுக்கு வந்தது

புதுடெல்லி, ஜூலை 15–

மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படியை 17 சதவீதத்தில் இருந்து 28 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இந்த 11 சதவீத உயர்வு ஜூலை 1ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

மத்திய அரசு ஊழியர்களுக்கு ஆண்டுக்கு 2 முறை அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படுகிறது. இதுபோல் ஓய்வுபெற்ற மத்திய அரசு ஊழியர்களுக்கு அக விலை நிவாரணத் தொகை உயர்த்தப்படுகிறது.

விலைவாசி உயர்வுக்கு ஏற்ப ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் இந்த உயர்வு அறிவிக்கப்படும். இந்நிலை யில் எதிர்பாராத கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த ஆண்டு ஜனவரி 1 முதல் தற்போது வரை 3 தவணைகளுக்கு இவற்றை மத்திய அரசு நிறுத்தி வைத்தது.

கொரோனா தொற்றுக்காக பெருமளவு தொகை செலவு செய்யப்படுவதாலும் போதிய நிதி ஆதாரம் இல்லாததாலும் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது தொடர்பான முடிவை மத்திய அரசு கடந்த ஆண்டு ஏப்ரல் 23ம் தேதி அறிவித்தது.

இந்நிலையில் பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான டிஏ, டிஆர் ஆகியவற்றை ஜூலை 1, 2021 முதல் உயர்த்தி வழங்க முடிவு செய்யப்பட்டது.

அடிப்படை ஊதியம் அல்லது ஓய்வூதியத்தில் தற்போது 17 சதவீதமாக டிஏ மற்றும் டிஆர் உள்ளது. இது தற்போது 28 சதவீதமாக அதாவது 11 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்குர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறும்போது, “இந்த முடிவால் மத்திய அரசுக்கு சுமார் ரூ.34,400 கோடி கூடுதல் செலவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 48 லட்சத்து 34 ஆயிரம் மத்திய அரசு ஊழியர்கள், 65 லட்சத்து 26 ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் பலன் அடைவார்கள்” என்றார்.

திருவள்ளூர் மாவட்டத்தில்

கோவில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த 5 பேர் குடும்பத்திற்கு தலா ரூ. 5 லட்சம் நிவாரண உதவி: முதலமைச்சர் உத்தரவு

சென்னை, ஜூலை 15–

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கரும்புக்குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீஅங்காளம்மன் கோவில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த 5 பேர் குடும்பத்திற்கு தலா ரூ. 5 லட்சம் வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கரும்புக்குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீஅங்காளம்மன் கோவில் குளத்தில், அப்பகுதியைச் சேர்ந்த 5 நபர்கள் துணி துவைத்துக் கொண்டிருந்தபோது, நர்மதா (வயது 11) என்ற சிறுமி திடீரென ஆழமான பகுதிக்குச் சென்றதால், அச்சிறுமியைக் காப்பாற்றுவதற்காக சுமதி (வயது 35), ஜோதி (வயது 35), அஸ்விதா (வயது 14), ஜீவிதா (வயது 14) ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக ஆழமான பகுதிக்குச் சென்றபோது, மேற்படி 5 நபர்களும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரச் செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த 5 நபர்களின் குடும்பத்தினருக்குத் தலா ஐந்து லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தங்கம் விலை பவுனுக்கு ரூ.160 அதிகரிப்பு

சென்னை, ஜூலை 15–

சென்னையில் இன்று ஆபரண தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.160 உயர்ந்து, ரூ.36,456க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராம் தங்கம் ரூ.1 உயர்ந்து, ரூ.4,532 ஆக உள்ளது.

அதேநேரத்தில் வெள்ளி விலை சற்று அதிகரித்துள்ளது. வெள்ளி கிராமுக்கு 10 பைசா அதிகரித்து, 10 கிராம் ரூ.74 ஆகவும், கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.74 ஆயிரம் ஆகவும் உள்ளது.

திருவள்ளுவர், பாரதியார், காமராஜர், அண்ணா விருதுகள்: விண்ணப்பங்கள் வரவேற்பு

சென்னை, ஜூலை.15

தமிழுக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபடும் தமிழ் அறிஞர்களை சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசு பல்வேறு விருதுகளை வழங்கி சிறப்பித்து வருகிறது. அந்த வகையில், தை மாதம் 2ம் நாள் நடைபெற உள்ள திருவள்ளுவர் திருநாளில், திருவள்ளுவர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, கி.ஆ.பெ.விசுவநாதம் விருது, பெருந்தலைவர் காமராஜர் விருது, பேரறிஞர் அண்ணா விருது ஆகிய விருதுகள் வழங்கப்பட உள்ளன.

இந்த விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்ப படிவத்தை தமிழ் வளர்ச்சித்துறையின் www.tamilvalarchithurai.com என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம். விண்ணப்பிப்பவர்கள் தன்விவர குறிப்புகளுடன் நிழற்படம் 2, எழுதிய நூல்களின் பெயர்பட்டியலுடன் அந்த நூல்களில் ஒரு படி வீதம் தமிழ் வளர்ச்சி இயக்குனர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ் வளர்ச்சி வளாகம், முதல் தளம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை–600008 என்ற முகவரிக்கு அடுத்த மாதம் (ஆகஸ்ட்) 16ந்தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

மேலும் விவரங்களை 044–28190412, 28190413 என்ற எண்ணிலும், tamilvalarchithurai@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

மேற்கண்ட தகவல் தமிழ் வளர்ச்சி இயக்குனர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

“படிவம் எண். INC–25A”

பப்ளிக் கம்பெனியை பிரைவேட் கம்பெனியாக மாற்ற செய்தித்தாளில் வெளியிடப்பட வேண்டிய விளம்பரம்

பிராந்திய இயக்குனர் முன்பாக, கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகம், தென்பிராந்தியம்

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 14 மற்றும் கம்பெனிகள் (துவக்கம்) விதிகள் 2014, விதி 41 விஷயத்தில்

மற்றும்

M/s. காஸ்மோ ஒன் பிசினஸ் பார்க் லிமிடெட் (முன்னர் இந்தியாபுல்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட் என்றழைக்கப்பட்டது) பதிவு அலுவலகம், மனை எண் 14,3வது பிரதான சாலை, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600058, தமிழ்நாடு, இந்தியா. **(“மனுதாரர்” அல்லது கம்பெனி”)**

திங்கட்கிழமை, 21 ஜூன், 2021 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, கம்பெனியை பிரைவேட் லிமிடெட் கம்பெனியாக மாற்றுவதற்காக கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 14 மற்றும் மேற்சொன்ன விதிகளின் கீழ் மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய கம்பெனி திட்டமிட்டு அத்தகைய மாற்றத்திற்கான அனுமதி பெற உறுதி ஆக்கம் கோருகிறது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் அந்தஸ்தை மாற்ற/திட்டமிட்டுள்ள மாற்றத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்தை அபிடவிட்டுடன் இணைத்து சம்பந்தப்பட்ட பிராந்திய இயக்குனர்,

டாக்டர் கே. திருமலைமுத்து

5வது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை–600 006, தமிழ்நாடு, இந்தியா

அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான பதினான்கு நாட்களுக்குள் நேரடியாக அளிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள மனுதாரர் கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

மனை எண் 14, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600058, தமிழ்நாடு, இந்தியா

மனுதாரர் சார்பாக
காஸ்மோ ஒன் பிசினஸ் பார்க் லிமிடெட்
மோஹித் அரோரா
இயக்குனர்
DIN: 08100136

பதிவு அலுவலகத்தின் முழுமையான முகவரி: மனை எண் 14, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600058, தமிழ்நாடு, இந்தியா
தேதி: ஜூலை 15, 2021
இடம்: சென்னை

ESSAR

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 56, புதிய எண். 77, C.P. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை–600 018.
Tel.: +91-44-2499 1992 • Fax: +91-44-2499 4922 | Email id: eslinvestors@essar.com | CIN No.: L65990TN2005PLC071791

30 ஜூன் 2021ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(₹லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு
	30.06.2021	31.03.2021	30.06.2020	31.03.2021
	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கையானது
செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய்	8.00	20.00	-	23.00
ஆண்டுக்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு அயிட்டங்களுக்கு முன்)	5.81	16.15	(6.98)	1.55
வரிக்கு முன் ஆண்டுக்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	5.81	16.15	(6.98)	1.55
வரிக்கு பின் ஆண்டுக்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	5.81	16.15	(6.98)	1.55
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம்)	5.81	16.15	(6.98)	1.55
செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/–)	1,428.78	1,428.78	1,428.78	1,428.78
இதர ஈக்விட்டி – (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக)				(1,348.60)
ஒரு பங்கு சம்பாத்தியம் (அடிப்படை) (₹) ஒரு பங்கு சம்பாத்தியம் (டைலூட்டட்) (₹) (★வருடாந்திரமல்ல)	0.04 0.04	0.11 0.11	(0.05) (0.05)	0.01 0.01

குறிப்பு

1. மேற்கண்ட முடிவுகள் கம்பெனியின் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு ஜூலை 14, 2021 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் இயக்குனர்கள் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.essar.com–ல் உள்ளது.

இடம் : மும்பை
தேதி : ஜூலை 14, 2021

இயக்குனர்கள் குழுவின் சார்பாக
இயக்குனர்

---

kotak
Kotak Mahindra Bank

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை 400 051.
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட், எண். 185, 2வது மாடி, மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் (54 ஆப் 2002) கீழும் மற்றும் பிரிவு 13(12)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் 3வது விதிமுறைக்கு ஏற்ப, கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, திரும்ப செலுத்தும் நாள் வரையிலான வட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்களை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். எனினும், மேற்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/உடன்கடன்தாரர்கள் பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள், உடன்கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தில் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதிகளுக்கு இணங்கவும், கீழ்க்கண்ட தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாக, பொதுமக்களுக்கு பொதுவாக எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட மேற்சொன்ன அசையா சொத்து கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. பிரிவு 13(2)–ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ்கள் அனுப்பிய தேதி, நிலுவைத் தொகை, சொத்தின் விவரம், கடன்தாரர்கள் விவரம் மற்றும் செலுத்த வேண்டிய தொகை மற்றும் சுவாதீனம் எடுத்த தேதி ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்,	கடன்தாரர், உடன்கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி கடன் கணக்கு எண். கடன் தொகை	அசையா சொத்தின் விவரம்	1. சுவாதீனத் தேதி 2. சுவாதீன வகை 3. டிமாண்ட் நோட்டீஸ் தேதி 4. நிலுவைத் தொகை ரூ.
1	மெசர்ஸ் ஹரிபாபு லாண்டரி மார்ட், அதன் உரிமையாளர் திரு. ஹரிபாபு RAT : கதவு எண்.6-2, நாகலாபுரம் சாலை, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 026. திரு. ஹரிபாபு R, த/பெ. திரு. ராதாகிருஷ்ணன் & திரு. ராதாகிருஷ்ணன் M மற்றும் திருமதி. ராணியம்மாள் R. அனைவரது வசிப்பிடம்: கதவு எண்.372, TNHB குறுக்கு தெரு, செவ்வாப்பேட்டை, திருவள்ளூர், சென்னை, தமிழ்நாடு. அனைவரது வசிப்பிடம்: ஏ/18, மாவத்தான் பியூச்சர்ஸ், என்.எம். ஜோஷி மார்க், லோயர் பரேல், மும்பை - 400 013. கடன் கணக்கு எண். LNCHN06817-180000927 வழங்கப்பட்ட கடன் தொகை: ரூ.8,00,000/- (ரூபாய் எட்டு லட்சம் மட்டும்)	திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுக்கா, செவ்வாப் பேட்டை கிராமம், சர்வே எண்.62/2ஏ பகுதி, மனை எண்.372-ல் (எல்ஐஜி வீடு) உள்ள 788 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் மற்றும் அதன் எல்லைகள் : வடக்கில் : மனை எண்.373, தெற்கில் : 6.0 மீட்டர் விஸ்தீரணம் கொண்ட சாலை, கிழக்கில் : 6.0 மீட்டர் விஸ்தீரணம் கொண்ட சாலை, மேற்கில் : மனை எண்.371. அடமானதாரர் பெயர் : திரு. ஹரிபாபு R, த/பெ. திரு. ராதாகிருஷ்ணன்	1. 12.07.2021 2. அடையாள சுவாதீனம் 3. 12.04.2021 4. 12.04.2021 அன்று செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.10,27,245/- (ரூபாய் பத்து லட்சத்து இருபத்தேழாயிரத்து இருநூற்று நாற்பத்தைந்து மட்டும்) மற்றும் 13.04.2021 முதல் முழுமையாக திரும்ப செலுத்தும் காலம் வரை பொருந்தக்கூடிய வட்டி
2	மெசர்ஸ் பூஜா எலக்ட்ரிகல் அண்ட் எலக்ட்ரானிக் C/o. திரு. D. சன்னாராம் என்ற D. சானேராம், வசிப்பிடம் : கதவு எண்.6-2, நாகலாபுரம் சாலை, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 026, திரு. D. சன்னாராம் என்ற D. சானேராம், அனைவரது வசிப்பிடம் : கதவு எண். 18/5, நாகலாபுரம் சாலை, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 026. மேலும் : நத்தம் பழைய சர்வே எண்.91/2பி, பட்டாப்படி புதிய சர்வே எண்.144/16, எண்.36, அனந்தேரி கிராமம், ஊத்துக்கோட்டை தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் கடன் கணக்கு எண். LNCHN06717-180001612 வழங்கப்பட்ட கடன் தொகை: ரூ.10,07,989/- (ரூபாய் பத்து லட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தொன்பது மட்டும்)	திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை தாலுக்கா, அனேந்தேரி கிராமம், எண்.36-ல் உள்ள 2327 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். அதன் நத்தம் பழைய சர்வே எண்.91/2பி, பட்டாப்படி புதிய சர்வே எண்.144/16. நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளையும் உள்ளடக்கிய நத்தம் பழைய சர்வே எண்.91/2பி, பட்டாப்படி புதிய சர்வே எண்.144/36-ல் உள்ள 1308 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம். இந்த சொத்தானது திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை தாலுக்கா, அனேந்தேரி கிராமம், எண்.36-ல் உள்ளது. அடமானதாரர் பெயர்: திரு. சென்னாராம், த/பெ. திரு. தர்மாராம்	1. 12.07.2021 2. அடையாள சுவாதீனம் 3. 12.04.2021 4. 12.04.2021 அன்று செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.12,36,488/- (ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து முப்பத்தாறாயிரத்து நானூற்று எண்பத்தெட்டு மட்டும்) மற்றும் 13.04.2021 முதல் முழுமையாக திரும்ப செலுத்தும் காலம் வரை பொருந்தக்கூடிய வட்டி

தேதி: 15.07.2021
இடம்: சென்னை

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டுக்காக
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

இதர விவரங்களுக்கு திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9884718338), திரு. சூர்ய நாராயணன் (+91 9600222111) மற்றும் திரு. விஜய் குமார் மேனன் (+91 9940572248) ஆகியோரை அணுகலாம்

ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months thereafter.I, KAVYA.P.H, D/o. P. Haridasan, aged about 22 years, permanently residing at Flat No. 401, Fourth Floor, Citaa valley, No. 20 Jayammal street, Devendra Nagar, Kattankulathur, Chengalpattu District, Tamilnadu-603203.Intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu and Puducherry, Bar council building, High Court Campus, Chennai -600104.

Those who have any Valid objections may notify the same to the bar council within 10 days.

KAVYA.P.H

19–SP1–II– COURT
BEFORE THE MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL AT CHENNAI
M.C.O.P.No.715 of 2020

S.Sathish ...Petitioner/s
Vs
1.R. Balaji,
2. United India Insurance Company Limited.
...Respondent/s

To
R–1, R. Balaji,
S/o. Rajagopalan,
No.50/88, K3, Sam Court,
Panchali Amman Koil Street,
Arumbakkam,
Chennai –600 016.

Please Take Notice that the above M.C.O.P.No.715 of 2020 is posted for your appearance on 06.09.2021 at about 10.30 A.M. You are hereby asked to appear before tha above said court either in person or by pleader without fail. Failing which the matter will be decided in your absence.

A.Gurunathan,
Counsel for Petitioner

II– COURT
BEFORE THE MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL AT CHENNAI
MP. No.5514 of 2019
in
M.C.O.P.No.2224 of 2018

G. Ajithkumar. ...Petitioner/s
Vs
1. Nokia Solution & Network India (P) Ltd.,
2. Reliance General Insurance Company Limited.
...Respondent/s

To
R–1, Nokia Solution & Network India (P) Ltd.,
Pacifica Tech Park Survey,
No.76, 5th Floor, Rajiv Gandhi Salai, Navallur –603 103.

Please Take Notice that the above MP. No.5514 of 2019 in M.C.O.P.No.2224 of 2018 is posted for your appearance on 23.08.2021 at about 10.30 A.M. You are hereby asked to appear before tha above said court either in person or by pleader without fail. Failing which the matter will be decided in your absence.

A.Gurunathan,
Counsel for Petitioner

எல்&டி பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: டெக்னோபொலிஸ், 7வது மாடி, பிளாட் நம். 4,
பிளாக் பிபி, செக்டார் V, சால்ட் லேக், கொல்கத்தா 700091
சிஐஎன் நம் .: U65910WB1993FLC060810
கிளை அலுவலகம்: சென்னை

L&T Financial Services

கையகப்படுத்துதல் அறிவிப்பு
[விதி-8(1)]

அதாவது கீழே கையெழுத்திட்டுள்ள, எல்&டி பைனான்ஸ் லிமிடெட்டின் (ஏப்ரல் 12, 2021 அன்று என்சிஎல்டி மும்பை ஒப்புதலின் பேரில், முந்தைய எல்&டி ஹவுஸிங் பைனான்ஸ் லிட் ஒன்றிணைக்கும் திட்டத்தின் கீழ் எல்&டி பைனான்ஸ் லிட் உடன் இணைக்கப்பட்டுள்ளது. அதேபோல, என்சிஎல்டி கொல்கத்தா, எல்&டி ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட் இரண்டும் எல்&டி பைனான்ஸ் லிமிடெட் (எல்டிஎஃப்) உடன் இணைக்கப்பட்டுள்ளது.) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட், 2002 கீழ் மற்றும் செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மெண்ட்) ரூல்ஸ், 2002-ன் கீழ் விதி (3) கீழ் பிரிவு 13(12)-ன் அதிகார வரம்பைப் பயன்படுத்தி டிமாண்ட் நோட்டீஸ் அளித்த தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் பாக்கித் தொகை மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் இதர கட்டணங்கள், செலவுகள் உட்பட இதர தொகைகளை செலுத்தும் தேதி வரை/கணக்கில் பணம் வரவாகும் வரை செலுத்தும்படி கூறி கடன்தாரர்/உப கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதிக்கு டிமாண்ட் நோட்டீஸ்கள் அளித்து இருந்தார். கடன்தாரர்/உப கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதி மேற்படி தொகையை திருப்பிச் செலுத்தத் தவறி விட்டனர். எனவே கடன்தாரர்/உப கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதிக்கு மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படும் அறிவிப்பு என்னவெனில் கீழே கையெழுத்திட்டவர் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பின்படி மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13 கீழ் விதி 8-ன் படி கீழே விவரம் அளிக்கப்பட்டுள்ள மேற்படி சொத்தை சிம்பாலிக் பொசெஷன் ஆக கையகப்படுத்தி உள்ளார்.

<table>
<tr><th rowspan="2">கடன் கணக்கு எண்</th><th rowspan="2">கடன்தாரர்/கள் உப கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதியின் பெயர்</th><th rowspan="2">பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரம்</th><th colspan="2">டிமாண்ட் அறிவிப்பு</th><th rowspan="2">கையகப்படுத்திய தேதி மற்றும் வகை</th></tr>
<tr><th>தேதி</th><th>பாக்கியுள்ள தொகை (₹)</th></tr>
<tr><td>CHNHL18000 440</td><td>1. ராஜசேகர் பி
2. மஞ்சுளா ஆர்
3. கீதா மெடிக்கல்ஸ்</td><td>அனைத்தும் அடங்கிய சொத்து முகவரி- பிளாட் எண் எஸ் 2, வட மேற்கு பகுதி, இரண்டாம் மாடி, ஸ்ரீ எஸ்டிஎஸ்., பிளாட் எண்.113, அன்ஸ் நகர், பழவேடு, ஆவடி, திருவள்ளூர், தமிழ்நாடு, 600055. ஃபிளாட் எண் எஸ் 2, ப்ளாட் எண், 113, 2648 சதுர அடி அளவு, சர்வே எண் 502/1 பி, 483-ல் அமைந்துள்ளது.
பட்டா எண்.1358 துணைப்பிரிவு சர்வே எண் 502/13, சிஎம்டிஏ 27.06.2006 தேதியிட்ட ஒப்புதல் எண்.59 / 2006. அன்ஸ் நகர் என அழைக்கப்படும் லேஅவுட்டில், இந்த சொத்து அமைந்துள்ள முகவரி- எண் 9, பழவேடு கிராமம், மதுரா மேளப்பேடு கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் - 600055 மற்றும் இதன் எல்லை விவரங்கள்
வடக்கு - பிளாட் எண்.114 மற்றும் 115. தெற்கு -பை - 30 அடி சாலை, கிழக்கு - காலி நிலம், மேற்கு -ப்ளாட் எண்.112</td><td>30.03.2021</td><td>Rs. 22,28,919.99 /- 04/03/2021 அன்று</td><td>12.07.2021 சிம்பாலிக் பொசெஷன்</td></tr>
<tr><td>CHNHL19000 072</td><td>1. விஜய குமார் ஏ
2. ராம்குமார் வி
3. கேரியர் டெவலப்மெண்ட் ஃபவுண்டேஷன் ஆஃப் இந்தியா</td><td>அனைத்தும் அடங்கிய சொத்து முகவரி- கன்னிகா கேஸில், ஃபிளாட் எண்: எஸ்எஃப் 5, இரண்டாவது மாடி, வேப்பம்பட்டு கிராமம், திருவள்ளூர், தமிழ்நாடு, 602001.
1050 சதுர அடி பரப்புள்ள கன்னிகா கேஸில் பல மாடி கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் குடியிருப்பு பிளாட் எண் 5. இது 1050 சதுர அடி அஸ்திவார பகுதி உடன், 4090 சதுர அடி பரப்பு நிலத்தின் 415 சதுர அடி பிரிக்கப்படாத நிலப் பகுதி கொண்டது. இந்த சொத்து எஸ்.எண். 89ல் வேப்பம்பட்டு கிராமம், திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்திற்குள் மற்றும் திருவள்ளூர் துணை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. 6540 சதுர அடி நிலம் (2450 சதுர, அடி, + 1079 சதுர அடி + 3011 சதுர அடி) நிலத்தின் எல்லை விவரங்கள்
<table>
<tr><td></td><td>2450 சதுர அடி</td><td>1079 சதுர அடி</td><td>3011 சதுர அடி</td></tr>
<tr><td>வடக்கு</td><td>பாஸ்கரன் பிளாட்</td><td>ஐட்டம் நம்.1</td><td>பாஸ்கர் பிளாட்</td></tr>
<tr><td>தெற்கு</td><td>ஆலமரம் தெரு</td><td>ஆலமரம் தெரு</td><td>ஐட்டம் நம்.1 மற்றும் திரு.காந்தி நிலம்</td></tr>
<tr><td>கிழக்கு</td><td>பாஸ்கரன் பிளாட்</td><td>பக்தவத்சலம் நாயுடு கூட்டு சொத்து</td><td>பக்தவத்சலம் நாயுடு கூட்டு சொத்து</td></tr>
<tr><td>மேற்கு</td><td>விஜயராகவலு நாயுடு வீடு</td><td>எஸ்.காந்தி பிளாட்</td><td>விஜயராகவலு நாயுடு வீடு</td></tr>
</table></td><td>30.03.2021</td><td>Rs. 35,06,297.10/- 04/03/2021 அன்று</td><td>12.07.2021 சிம்பாலிக் பொசெஷன்</td></tr>
<tr><td>CHNHL19000 106</td><td>1. சரவணன் ஜே
2. ஜோதீஸ்வரி எஸ்</td><td>சொத்து முகவரி மற்றும் பிளாட் எண் 3 துணைபிரிக்கப்பட்ட பிளாட் எண் 3 ஏ & 3 பி, பிளாட் எண் எஃப் 4 முதல் மாடி, 51 வது தெரு, இ செக்டோ, சிவா சக்தி நகர், சென்னை தமிழ்நாடு திருவள்ளூர் இந்தியா 600062. பிளாட் 644 சதுர அடி பரப்பளவில் முதல் மாடியில் எண் 4, (பொதுவான பகுதிகள் உட்பட)
'ஏ & டி என அறியப்படும் கட்டிடத்தில் டி பிரமோட்டர்கள், அதோடு சேர்ந்து மொத்தம் 2455 சதுர அடி பரப்பு நிலத்தில் 276 சதுர அடி பிரிக்கப்படாத நிலப் பகுதி. இந்த சொத்து பழைய எஸ். எண் 729/1, புதிய எஸ். எண் 729/729/1A1A1A1A1A2 திருமுல்லைவாயல் கிராமத்தில் பிளாட் நம்பர் 3ல் உள்ளது. புதிய உப பிரிக்கப்படாத பிளாட் எண்கள் 3ஏ மற்றும் 3 பி, 51வது தெரு, இ செக்டர், சிவ சக்தி நகர், திருமுல்லைவாயல், சென்னை 600062 மற்றும் இதன் எல்லை விவரங்கள்:
வடக்கு - பிளாட் எண் 2, தெற்கு - பிளாட் எண் 4 மற்றும் 6, கிழக்கு - திருமதி ராணிக்கு சொந்தமான சொத்து, மேற்கு -20 அடி பொதுவான சாலை</td><td>30.03.2021</td><td>Rs. 29,88,591.01 /- 04/03/2021 அன்று</td><td>12.07.2021 சிம்பாலிக் பொசெஷன்</td></tr>
<tr><td>H1843406091 9073257L மற்றும் H1843406091 9073257</td><td>1. ராஜேஸ்வரி இளந்திரையன்
2. இளந்திரையன் பிச்சை</td><td>அனைத்தும் அடங்கிய சொத்து முகவரி- பிளாட் எண் 62 ஏ, காவரப்பாளையம் எண் 5, விலிஜியம்பாக்கம் கிராமம், ஆவடி, சென்னை 600054 தமிழ்நாடு. இந்த சொத்து எஸ். எண்: 156/1ல் 5382 சதுர அடி பரப்பில் அமைந்துள்ளது. பிளாட் எண் 62 இரண்டு உப பிரிக்கப்பட்ட பிளாட்களாக, 62ஏ 2070 சதுர அடியிலும், 62பி 2634 சதுர அடி பரப்பிலும் மற்றும் பொது பகுதி பாதைகளும் கொண்டவை.
678 சதுர அடியில், ஆவடி நகராட்சியால் சிஎம்டிஏ ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பி.பி. எண் 533/15 / எஃப் 1, தேதி: 14-09-2015, கட்டிடம்
விண்ணப்ப எண் 511/15/எஃப் 1, தேதி: 14-09-2016 -; கட்டிடம் ஒப்புதல் எண் 466/15/எஃப் 1, தேதி-04-08-2015, காவரப்பாளையத்தில் எண் 5, விலிஜியம்பாக்கம் கிராமம், ஆவடி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம்.
எல்லை விவரங்கள்
வடக்கு - திரு. செங்கையா நாயுடுவுக்கு சொந்தமான பிளாட்
தெற்கு - திரு. புருஷோத்தமன் நாயுடுவுக்கு சொந்தமான பிளாட்
கிழக்கு - சாலை
மேற்கு - திரு. கிருஷ்ணப்ப நாயுடுவுக்கு சொந்தமான பிளாட்</td><td>30.03.2021</td><td>Rs. 36,78,117.45/- 04/03/2021 அன்று</td><td>12.07.2021 சிம்பாலிக் பொசெஷன்</td></tr>
</table>

கடன்தாரர்/உப கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதி குறிப்பாக மற்றும் பொதுவாக பொதுமக்கள் கீழே விபரம் குறிப்பிட்டுள்ள அந்த சொத்து சம்பந்தமாக எந்த விவகாரங்களிலும் ஈடுபடக்கூடாது மற்றும் அந்த சொத்து சம்பந்தப்பட்ட எந்த விவகாரங்களிலும் ஈடுபடுவோர் எல்&டி பைனான்ஸ் லிமிடெட்டுக்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகை மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் இதர கட்டணங்கள், செலவுகள் உட்பட இதர தொகைகளை செலுத்தும் தேதி வரை/கணக்கில் பணம் வரவாகும் வரை செலுத்தப் பொறுப்புடையவர்கள் என இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

தேதி: 15.07.2021
இடம்: சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி பைனான்ஸ் லிமிடெட்-க்காக